# ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு

## ஊவா மாகாண அரசாங்க சேவையில் மாகாண வருமான திணைக்களத்தின் வரி அதிகாரி IIஆம் தரப் பதவிக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல்- 2025

ஊவா மாகாண அரசாங்க சேவையில் மாகாண வருமான திணைக்களத்தில் வெளிக்கள / அலுவலக அதிகாரி - தொகுதி 2 சேவை வகுதியின் கீழ் வரும் வரி அதிகாரி IIஆம் தரத்தில் வெற்றிடமாகவுள்ள 03 பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்காக ஊவா மாகாணத்தில் பின்வரும் தகுதிகள் சகிதம் ஊவா மாகாணத்தில் குறைந்தபட்சம் 03 வருட காலம் நிரந்தர வதிவைக் கொண்ட விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் 2025-11-28ஆம் திகதியாகும்.

| தொ. இல. | பதவி, தரம் மற்றும் சம்பள அளவு | கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் நாளில் வயது |
|---|---|---|
| 01 | ஊவா மாகாண அரசாங்க சேவையின் மாகாண வருமான திணைக்களத்தில் வரி அதிகாரி IIஆம் தரம்<br><br>**சம்பள அளவு:**<br>MN 5 - 2025 பிரகாரம் ரூபா 58,660 - 10x1190- 11x1360- 15x1670 – 110,570/- 10/2025 அ.நி.சுற்றறிக்கையின் IIIஆம் அட்டவணையின் பிரகாரம் 2027-01-01ஆம் திகதி வரை சம்பளம் வழங்கப்படும். | **வயது:** 21 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.<br><br>**கல்வித் தகைமைகள்:**<br>I. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பல்கலைக்கழகமொன்றில் அல்லது பட்டம் வழங்கும் நிறுவனமொன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றின் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>II. பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் வியாபாரம் மற்றும் கணக்கியல் சான்றிதழ் படிவத்தின் IIஆம் கட்டத்தில் சித்தியடைந்திருத்தல், இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் கணக்கியல் அல்லது வர்த்தகம் தொடர்பான டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்<br>அல்லது<br>III. மேல் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக இருக்க வேண்டும். |

02. வரி அதிகாரி பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான தகைமைகள், விண்ணப்பிக்க வேண்டிய முறை, போட்டிப் பரீட்சையின் பாடத்திட்டம் போன்ற சகல தகவல்களையும் உள்ளடக்கிய விபரமான அறிவித்தல் மற்றும் விண்ணப்பப் படிவங்களை https://exams.psc.up.gov.lk/ எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்நிலை முறையின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

03. வரி அதிகாரி பதவிக்கான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் மேற்கூறிய பதவிக்காக விண்ணப்பிக்கலாம் என்பதுடன் குறித்த தகுதிகளைப் பூர்த்தி செய்திராத மற்றும் மேற்கூறிய வயதெல்லைக்கு புறம்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள, முறையான வகையில் சமர்ப்பிக்கப்படாத மற்றும் தாமதமாகக் கிடைக்கும் அனைத்து விண்ணப்பங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

04. நிகழ்நிலையில் 2025-11-28ஆம் திகதி அல்லது அதற்கு முன் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை முறைமைக்கு அனுப்பியதன் (Submit) பின் விண்ணப்பப் படிவத்தின் மென்பிரதியொன்றை பதிவிறக்கம் செய்து (மெனுவில் Application என்பதற்கு பிரவேசிக்கவும்) கொள்ள வேண்டும். பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் அச்சுப் பிரதியொன்றை பெற்று பரீட்சைக்காக பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை உரிய இடத்தில் ஒட்டி 2025-12-05ஆம் திகதி அல்லது அதற்கு முன் ''செயலாளர், ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு, இல. 14/4, பிலிபொதகம வீதி, பிங்அராவ, பதுளை'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கிவரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. பரீட்சை ஆணையாளர் நாயகம் அல்லது ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் வேறு பொருத்தமான நிறுவனத்தினால் நடாத்தப்படும் திறந்த எழுத்துமூல போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும். எழுத்துமூல போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் பொதுவான நேர்முகத் தேர்விற்கு உட்படுத்தப்பட்டு பொருத்தமானவர் தெரிவு செய்யப்படுவர். இந்த வெற்றிடங்களுக்காக ஆட்சேர்த்தல் / ஆட்சேர்க்காமல் விடுதல் அல்லது வெற்றிட எண்ணிக்கையின் ஒரு பகுதியைப் பூர்த்தி செய்தல் அல்லது இது தொடர்பான இறுதித் தீர்மானத்தை ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு தன்னகத்தே கொண்டுள்ளது. அதேபோல் இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருந்தால் அதுபற்றி தெளிவுபடுத்துதல்/ தீர்மானத்தை மேற்கொள்ளல் என்பன ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

06. இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு அலுவலகத்தின் 0552231460 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**(எல். ஏ. சோமரத்ன)**
**செயலாளர்,**
**ஊவா மாகாண சபை**
**அரச சேவை ஆணைக்குழு.**

**2025-11-10ஆம் திகதி,**
**ஊவா மாகாண சபை அரச சேவை ஆணைக்குழு,**
**இல. 14/4, பிலிபொதகம வீதி,**
**பிங்அராவ, பதுளை**

tamilguru.lk